RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2521

# Feminist Thoughts in Writer Imayam Novels

C. Kavitha [a,*], S. Vijaya Kalaivani [a]

[a] Department of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, Thoothukudi, Tamil Nadu, India
*Corresponding author Email: ckavithapc@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2521
Received: 27-01-2024; Revised: 14-03-2024; Accepted: 21-03-2025; Published: 05-04-2025

**Abstract:** In modern literature, novels occupy a special place in dealing with social issues and feminist messages. There has been a tendency in the society for ages to respect men and women as superior and women as inferior. When a woman is born on earth, she is subjected to many problems and complications in her lifetime. The concept of slavery of women in society still persists. Although women were given education, rights and equal rights between men and women. The woman was not given full rights. Men have the right to live independently in society. If a woman lives alone or wants to live, she does not have adequate protection. Society speaks ill of them. Society has forced women to live under the authority of men. In that manner, the aim of this study is to explore concepts such as the distinctiveness of femininity, the purpose of womanhood, the status of women, female oppression, patriarchy, women's progress, the struggles of life, and the enemies of femininity as reflected in the works of the Writer Imayam.

**Keywords:** Writer Imayam, Modern literature, Women in Society, Social Issues Tamil Novels

# இமையம் புதினங்களில் பெண்ணியச் சிந்தனைகள்

ச. கவிதா [அ *], சு. விஜயாகலைவாணி

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

ஆண், பெண் இணைந்த வாழ்க்கையில் ஆணை உயர்வாகவும் பெண்ணைத் தாழ்வாகவும் மதிக்கின்ற நிலை தொடர்ந்து காலங்காலமாக சமூகத்தில் இருந்து வருகிறது. பெண் என்று பூமிதனில் பிறந்துவிட்டால் அவள்தன் வாழ்நாளில் பல்வேறு பிரச்சனைகள், சிக்கல்களுக்கு உள்ளாக்கப்படுகிறாள். இன்றைய சூழலில் இமையம் புதினங்களில் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## பெண்ணியம் என்பதன் விளக்கம்

பெண்ணியம் என்பதன் ஆங்கிலச்சொல் feminism என்பதாகும். 'பெமினிசம்' என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணியவாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணலக் கொள்கை என பலபொருள்கள் வழங்கப்படுகின்றன. குடும்பத்திலும் வேலை செய்யும் இடத்திலும் பெண்கள் தாழ்த்தப்பட்ட நிலையலேயே உள்ளனர். "பெண்ணியம் என்பது இப்போது நிலவுகின்ற சமுக நியதிகள், மதிப்பீடுகள், கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு மாறானதும் முரணானதுமான ஒருமதிப்பீட்டையும் கோட்பாட்டையும் உருவாக்கும் ஒருசமூகமாற்ற முயற்சி என மீனாட்சி முருகரத்தினம்" (Meenakshi Murugarathinam, 1987) விளக்கம் தருகிறார்.

## பெண்ணியத்தின் நோக்கம்

பெண்ணியம் பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான அடக்குமுறைகளையும் எதிர்பதுமட்டுமின்றி பெண்களின் மேம்பாட்டுக்குரிய வழிமுறைகளையும் செயல்படுத்துகிறது. இந்த அடக்குமுறைகள் பெண்ணினத்திற்குப் பொதுவாக இருப்பதால் இந்நிலைமாற பெண்களேபாடுபட வேண்டும். பிரச்சனைகளையும் அவற்றை தீர்ப்பதற்குரிய வழிமுறைகளையும் முடிவுசெய்ய வேண்டும்.

## பெண்மையின் சிறப்பு

அடக்கம், பொறுமை, அன்பு, அமைதித் தன்மையாகிய பெண்மையை ஆள்பவள் பெண்மகள் ஆவாள். நாணம் முதலாகிய நற்பண்புகளைப் பெற்றிருப்பதை.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்

நிச்சமும் பெண்பாற்குரிய என்ப

செறிவும் நிறையும் செம்மையும் செய்யும்

அறிவும் அருமையும் பெண்பாலான"

என்ற தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது. இவைகளைப் பெண்மைக் குணங்களாகச் சித்தரிக்கிறார் தொல்காப்பியர் (Thamizhannal, 2010).

பெண்மையைத் தாய்மையாகவும் தாரமாகவும் போற்றும் இனிய சிந்தனையை ஊட்டுகின்றார். பாரதியார், பெண் என்றால் தியாகத்தின் வடிவம், ஆண்களுக்கு இல்லாத அபாரசக்தி தமக்கு உண்டு என்பதைத் துரதிஷ்டவசமாகப் பெண்கள் மறந்தே போனார்கள். (Mangaiyarkarasi, 1999) என்கிறார்.

## சமுதாயத்தில் பெண்களின் நிலை

சமுதாயத்தில் பெண் அடிமையாகக் கருதப்பட்டநிலை இன்றும் நீடிக்கிறது. பெண்களுக்குக் கல்வி, உரிமை, ஆண்-பெண் சமஉரிமை கொடுக்கப்பட்டதாகக் கூறினாலும். பெண்ணுக்கு முழுமையான உரிமை வழங்கப்படவில்லை. சமுதாயத்தில் ஆண் தனித்து வாழ்வதற்கு உரிமை உள்ளது. பெண் தனித்து வாழ்ந்தாலோ அல்லது வாழநினைத்தாலோ அவளுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை. சமுதாயம் அவர்களைத் தவறாகப் பேசுகிறது. ஆணின் அதிகாரத்திற்கு உட்பட்டு பெண்கள் வாழ வேண்டும் என சமுதாயம் நிர்பந்திருக்கிறது.

'வாழ்க! வாழ்க!' என்னும் இமையம் அவர்களின் புதினத்தில் பெண்கள் பகுதியில் ஏற்பட்டிருந்த கூச்சல், குழப்பம், சாவு, கை, கால்முறிவு பற்றி எதுவும் தெரியாமல் த.உ.மு கழகத்தின் தலைவி "என்உயிரினும் உயிரான உடலினும் உடலான கண்ணினும் கண்ணான என் மூச்சினும் மேலான வாக்காளப் பெருங்குணமக்களே! உங்களிடம் வாக்குகேட்க வந்திருக்கிறேன்" (Imaiyam, 2020) என காகிதத்தைப் பார்த்து பார்த்துச் சத்தமாக தன்போக்கில் படித்துக் கொண்டிருந்தார். 'ஆறுமுகம்' புதினத்தில் "எனக்குன்னு - ஒருத்தன் இப்படி இல்லாமப் போனானே என்று சொன்னவள் ஆறுமுகத்தின் கைகளை வலுக்கட்டாயமாக எடுத்து தன்முகத்தில் அடித்துக் கொண்டாள். இரண்டு, மூன்று முறை அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். அவனிடம் நிறைய பேச வேண்டும் போல இருந்தது. அழுகை வந்தது தடுத்து விட்டது". (Imaiyam, 2007) இவ்வாறு இமையம் புதினங்கள் பெண்ணின் வாழ்க்கை நிலையை காட்சிப்படுத்துகின்றன.

## பெண்ணடிமை

வாழ்நாள் முழுவதும் பெண் ஆணுக்கு அடிமையாகவே இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இன்று பெண்கள் சமூகம், அரசியல், கல்வி, பொருளாதாரம், கலை முதலியவற்றில் உரிமையுடன் உயர்நிலை பெற்றுள்ளனர்.

'கோவேறு கழுதைகள்' என்னும்பு தினத்தில் 'அன்று காலை மேரி துணியெடுக்கத் தெருவுக்குப் போன போது, சடையனுக்கும் அவளுக்கும் சண்டை வந்த விட்டது. சடையன் அவளைச் சீண்டிப்பார்த்தான். அதை ஆரோக்கியத்திடம் வந்து சொல்லி அழுதாள்.' (Imaiyam, 2024)

`இப்போது உயிரோடிருக்கிறேன் 'என்னும் புதினத்தில் "இனிமேலாச்சும் ரைஸ்மில்லுக்கு வர்றவகிட்ட தப்பா நடக்காதிங்க என கூறியதும் எங்கவந்து என்னா பேசிக்கிட்டு இருக்கிற? - ஆஸ்பத்திரின்னு பாக்கிறன் இல்லன்னா லாடம் கட்டிப்புடுவன். ஜாக்கிறது" என்று அப்பா ஆத்திரத்துடன் சொன்னது துள்ளியமாகக் கேட்டது. (Imaiyam, 2022) என்ற வரிகள் பெண்ணடிமைத் தனத்தை வெளிப்படுத்துகிறது.

## ஆணாதிக்க நிலை

சமுதாயத்தில் ஆணாதிக்கம் மேலோங்கி நிற்பதை நம்கண்களால் காணமுடிகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஆணின் அதிகாரம்தான் காணப்படுகிறது. இந்த ஆணாதிக்கச் சிந்தனையைச் 'ஆறுமுகம்' என்ற புதினத்தில் தனது மகளான தனபாக்கியத்தை அவளின் விருப்பமின்றி ஒருவெள்ளிக் கிழமை மைலம் முருகன் கோவிலில் கல்யாணத்தை முடித்து வைக்கிறார். (Imaiyam, 2007) 'செல்லாத பணம்' என்ற புதினத்தில் சரோ என்பவள் புஸ்தகம் படிப்பா, அவளை குடும்பம் நடத்தவத்தியா, புக்கு படிக்க வந்தியான்னு கேட்டுஅடிப்பான். (Imaiyam, 2017)

'எங்கதெ' என்னும் புதினத்தில் ஆசிட் ஊத்தலாம், குரல் வளயை நெறிக்கலாம், கருந்த அறுக்கலாம், கை, கால் வேறவேறயா வெட்டலாம் என பெண்ணை கொடுயைப் படுத்தும் வரிகள் ஆணாதிக்க நிலைடைய சுட்டுகிறது. (Imaiyam, 2015)

## பெண்கள் முன்னேற்றம்

பெண்கள் தங்களின் வாழ்க்கைத் துணையினைத் தாங்களே தேர்வு செய்து கொள்கின்ற மனப்பக்குவத்தினைப் பெற்றிருந்தல் சிறப்பம்சமாகும். காலம்மாறமாற பெண்மையின் மேன்மையும் மாறி வருகின்றது. ஆண்கள் முயன்றும் செய்ய இயலாத பலகாரியங்களைப் பெண்கள் செய்கிறார்கள். அதற்கு அவர்களிடம் இருகின்ற தன்னம்பிக்கையே காரணமாக அமைகின்றது.

'ஆறுமுகம்' என்ற புதினத்தில் 'செம்படவம் பெண்களைவிட தனபாக்கியம் நன்றாகவே தடவிதடவி மீன்பிடிப்பாள். சேலை முந்தானையால் சேந்திச் சேந்தி கூட பிடித்துவிடுவாள்'. (இமையம், 2007) என்ற வரிகள் பெண்ணின் முன்னேற்றத்தை படம் பிடித்துகாட்டுகிறது.

## திருமணத்திற்குபின் தகாத தொடர்பு

திருமணம் என்பது ஆண், பெண்பாலுறவினால் நெறிப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்ட ஓர்அமைப்பாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்பதே நீதி ஆனால் ஆண், பெண் இருவரும் தனக்குத் திருமணமான பிறகும் பல ஆணிடம் மற்றும் பெண்ணிடம் தொடர்பு கொண்டு வாழ்கின்றனர்.

'ஆறுமுகம்' என்ற புதினத்தில்' ஆறுமுகம் வீட்டை விட்டு ஓடிவந்து பெண்வெறியனாகத் திரிந்தான்' (Imaiyam, 2007) "வசந்தாவுக்காக முயன்று கொண்டிருந்த வாட்ச்மேன் இந்தவிசயத்தைக் கிருஷ்ண புரத்துப் பையனிடம் சொல்ல அவன் வீட்டில் போய்ச் சொல்லி விடுவதாகவும், சுவர்சுவராக எழுதிவிடுவதாகவும் மிரட்டவே அவனுக்கும் தன் உடம்பை பொம்மையாக்கித் தந்தாள்" (Imaiyam, 2007) என்னும் வரிகள் மூலம் தகாத உறவில் ஈடுபட்டதை அறிய முடிகிறது.

## பெண்ணுக்கு பெண் எதிரி

பெண்கள் எந்த விதமான தயக்கமும் இன்றி சமுதாயத்தில் கலந்து பழகுகின்ற வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் வாழ்க்கைப்பாதையில் ஏற்படக்கூடிய

மேடுபள்ளங்களை அவர்களால் புரிந்து கொள்ள முடியும். எச்சரிக்கை உணர்வுடன் நடந்துகொள்வதற்கு அதுஒரு வாய்பாக அமையும். இவ்வாறு மதிக்கப்படுகின்ற பெண்ணானவள் பெண்ணுக்கே எதிரியாகக் காணப்படுகின்றாள்.

பெண்ணிற்கு பெண்தான் எதிரி இதனையாரும் மறுக்கமாட்டார்கள். அவர்களுக்கு அவள்மனம் எதிரி, அடுத்த வீட்டுப்பெண் எதிரி, சுற்றத்தாரும் எதிரி, அடுத்த பெண் தன் திறமையாலும், உழைப்பாலும் முன்னுக்கு வந்தால் அதனை பற்றி வக்கனையாகப் பேச ஆரம்பிப்பதும் பெண்தான். இமையம் அவர்களின்பு தினங்களிலும் இவையனைத்தும் பேசு பொருளாக்கப்படுகிறது.

'வாழ்க! வாழ்க' எனும் புதினத்தில் அரசியல் கூட்டத்திற்கு செல்லும் போது பெரிய வடவாடிக்காரிக்கு கோபம் வந்துவிட்டது. "எடத்தப்புடிச்சி ஒக்காருறத்துக்குத் துப்பில்ல வாயப்பாரு ஊத்தவாய" என்று சொல்லி காறித்துப்பினாள். "சட்டென்று நானும் தான் ஒக்காருவன்" என்று சொல்லி பெரிய வடவாடிக்காரியின் மடியில் சின்னவடவாடிக்காரி உட்கார்ந்தாள். "யாருமடியிலெ வந்துயாரு ஒக்காருறது? நீஎனக்கு ஒட்டா ஒறவா? என்று கேட்ட பெரியவடவாடிக்காரி ஆங்காரத்துடன் சின்னவடவாடிக்காரியை நெட்டிக்கீழேதள்ளினாள். கீழே வழுந்த சின்னவடவாடிக்காரி எட்டி, பெரியவடவாடிக்காரியின் தலைமுடியைப் பிடித்து இழுத்தாள். இரண்டு பெண்களும் அடித்துக் கொள்ள ஆரம்பித்தனர். அந்த வரிசையில் உட்கார்ந்திருந்த ஏழெட்டும் பெண்கள் ஒன்றாககூடி இருவரையும் பிரித்து வருவதற்குள் அந்த இடத்தில் பெரியகூச்சலும் குழப்பமும் உண்டாயிற்று" என்றவரிகள் பெண்களின் சண்டையை படம்பிடித்துக் காட்டுகின்றது (Imaiyam, 2020).

## பெண்களுக்குவாழ்வேபோராட்டம்

பெண் சிறுவயது முதல் பெற்றோர்களின் அரவணைப்பில் வளர்கிறாள். பருவத்திற்குப் பிறகு அவள் தன்னைக்காக்க ,தன்குடும்பத்தைக்காக்க பிறரைச் சார்ந்து வாழ்கிறாள். பெண்ணின் இன்பத்தில் பங்கு கொள்பவர்கள் துண்பத்தில் பங்குகொள்வது இல்லை.

'வாழ்க! வாழ்க!' என்னும் புதினத்தில் பணமில்லாத காரணத்தால் பெண்படும் போராட்ட உணர்வினை, "இரண்டு நாளா புள்ளைக்குக் குளிர்சுரமா இருக்கே, ஆஸ்பத்திரிக்கி தூக்கிட்டுப் போயி காட்ட வேணாமா? என்று ஆண்டாள்கே ட்டாள். போவனும் என்று பட்டும் படாமல் கொஞ்சம் இழுத்தமாதிரியும் வளர்மதி சொன்னதும் ஆண்டாளுக்குக் கோபம் வந்தது. எதுக்கு இழுக்கிறவ? என்று கேட்டாள். ஆஸ்பத்திரிக்கு சும்மா போவமுடியுமா? என்று வளர்மதி கேட்டது ஆண்டாளுக்கு மேலும் கோபத்தை உண்டாகிற்று. காசு இல்லங்கறக்காக உடம்பு சரியில்லாத புள்ளைய வீட்டுலேயே போட்டுவைச்சிருக்க முடியுமா? கவர்மண்டு ஆஸ்பதிரிக்காச்சும் போவ வேணாமா? "என கூறும் ஆண்டாளின் வரிகள் மூலம் பெண்கள் தினம் வாழும் வாழ்க்கை போராட்ட வாழ்க்கை என அறிய முடிகிறது.

## முடிவுரை

இமையம் அவர்களின் புதினங்கள் அனைத்திலும் பெண்கள் அடிமைப்படுவதையும் வாழ்வியல் சிந்தனைகளையும் சுட்டிக்காட்டுகிறார். ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்க்கையில் ஆணுக்கு அளிக்கப்படும் மதிப்பு, உரிமை, பெண்ணுக்கு மறுக்கப்படுகின்றன. சமுதாயத்திலும் குடும்பத்திலும் பெண்குறிப்பிட்ட வரையறைக்குள் தள்ளப்படுகிறாள் என்பதை இமையம் புதினங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## References

Imaiyam (2007) Arumugam, Kriya Publications, Tambaram, Chennai

Imaiyam (2015) En kathe, Kriya Publications, Tambaram, Chennai

Imaiyam (2017) Sellatha Panama, Kriya Publications, Tambaram, Chennai

Imaiyam (2020) Valga.! Valga, Kriya Publications, Tambaram, Chennai

Imaiyam (2022) Eppothu Naan Uyirodu Irukindren, Kriya Publications, Tambaram, Chennai

Imaiyam (2024) Koveru Kaluthaikal, Kriya Publications, Tambaram, Chennai

Mangaiyarkarasi (1999) Ilakiya Veethiyilea, Rajeswari Book House, Chennai

Meenakshi Murugarathinam, (1987) Introduction to Western Literary Analysis, Ennes Publications, Madurai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

C. Kavitha, S. Vijaya Kalaivani, Feminist Thoughts in Writer Imayam Novels, Indian Journal of Tamil, 6(2), (2025) 1-5. https://doi.org/10.54392/ijot2521